பக்கங்கள் 19+4

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 25 சனிக்கிழமை 14.12.2024 | அதிர்வு 135

## அநுர நாளை டில்லி விஜயம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார். 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







### பதவி விலகிய மாவையின் தலைமையில் கூட்டம் நடத்த முடியுமா?

# போர்க்களமாக மாறிய தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம்

## முடிவின்றி முடிந்தது

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை இடம்பெற்ற நிலையில் மாவை சேனாதிராஜா வந்த பின்னர் கூட்டத்தை ஆரம்பிக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் கோரியமையால் கூட்டத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் காலை 10 மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், இன்றைய கூட்டத்தில் வழமையை விட அதிகமான மத்திய குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது கூட்டத்தை ஆரம்பிப்பதற்குப் பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் முற்பட்டார். அப்போது குறுக்கிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வருகைதராமல் கூட்டத்தை நடத்த 02 ▶

# மக்களுக்குச் சேவையாற்ற முடியாதவர்கள் பதவிகளில் இருந்து உடன் விலக வேண்டும்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



“பதவிகள் சேவை செய்வதற்காக வழங்கப்படுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி மக்களுக்குச் சரியான சேவைகளை வழங்க வேண்டும். இல்லாவிடின் அந்தப் பதவியில் இருப்பதில் அர்த்தமில்லை.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் நாளும் பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலையின் ஏழூர் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை பாடசாலை அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினாராகப் பங்கேற்ற வடக்கு மாகாண ஆளுநர், சாதனை படைத்த மாணவர்களுக்கும்,ஆசிரியர்களுக்கும்பரிசில்களை வழங்கினார். 02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மக்களுக்கு...**

அவர் தொடர்ந்து தனது பிரதம விருந்தினர் உரையில்,

“நாங்கள் கல்வி கற்ற காலத்துக்கும் தற்போதைய காலத்துக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. அன்று எங்களின் பாடசாலை அதிபர்தான் மேலதிக நேர வகுப்புக்களை எடுத்தார். அவர்களைப் போன்ற ஆசிரியர்கள்தான் இன்றும் எங்களுக்கு முன்னுதாரணமான ‘கதாநாயகர்களாக’ இருக்கின்றார்கள். அன்றைய காலத்தில் நாம் தனியார் கல்வி நிலையங்களுக்குக் கூடச் செல்வதில்லை. அதற்கான தேவைப்பாடு ஏற்படவில்லை. கல்வியால்தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். கிராமத்தின் அபிவிருத்தியோ, எதுவாகினும் கல்வியால் அந்த மாற்றங்களை உருவாக்க முடியும்.

அதேநேரம் கல்வியில் எவ்வளவு உயர்ந்து விளங்கினாலும் நாங்கள் பண்புள்ளவர்களாக இல்லாவிட்டால் எம்மை யாரும் மதிக்க மாட்டார்கள். உயர் பதவியிலிருந்தாலும் பண்பு இல்லாவிட்டால் யாரும் எம்மை மதிக்க மாட்டார்கள். பதவி வரும் போது பணிவு வரவேண்டும்.

இன்றைய மாணவ சமுதாயத்துக்குப் பணிவு, இரக்கம், அன்பு என்பவற்றை ஆசிரியர்கள் கூடுதலாகப் போதித்து அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்ற வேண்டும். ஆசிரியர்கள் அன்றைய காலத்தில் எமக்கு அடித்தால் நாம் வீட்டில் சென்று சொல்வதற்குப் பயப்படுவோம். ஏனென்றால் வீட்டிலும் மீண்டும் அடி விழும். ஆனால், இன்று அது தலைகீழாகிவிட்டது. ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பது என்பது அவர்களை எதிரியாகக் கருதி அல்ல. அவர்களின் வளர்ச்சிக்காகவே தண்டிக்கின்றனர்.

இன்று தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பதற்கே எல்லோரும் தயங்குகின்றனர். அந்தளவு தூரத்துக்குப் பயம். நமக்கு ஏன் வீண்வம்பு என்று ஒதுங்கிப் போகின்றனர்.

அதேபோல், வீதிகளில் குப்பை போடுகின்றனர். 1970 ஆம் 1980 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தான் மிகத் தூய நகரம். இன்று மிக குப்பையான நகரமாக மாறியிருக்கின்றது. மோட்டார் சைக்கிள்களில், கார்களில் வந்து குப்பைகளைக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். வீதியிலும், வாய்க்காலிலும் குப்பை போடுவது நாங்கள்தான். வீதிகளையும், வாய்க்கால்களையும் ஆக்கிரமித்து கட்டடங்கள் கட்டுவதும் நாங்கள்தான். பின்னர் வெள்ளம் வந்துவிட்டது என்று கத்துவதும் நாங்கள்தான்.

எங்களின் மனநிலை மாறவேண்டும். இளமையில் – இந்த மாணவர்களிடத்தில் சரியான பழக்க வழக்கங்களை – விழுமியங்களை ஆசிரியர்கள் விதைக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். நாம் மற்றவருக்கு உதவவேண்டும். அப்படிச் செய்தால் எமக்கு பல மடங்கு திருப்பிக்கிடைக்கும். இந்தப் பழக்கங்களை மாணவர்களிடத்தில் வளர்த்தெடுக்க வேண்டும்.

எதிர்காலச் சிற்பிகளான மாணவர்கள் சமூகத்தில் கல்வியறிவுடன் சிறந்த ஒழுக்கத்துடன் வளரவேண்டும். ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்.” – என்றார்.






**போர்க்களமாக...**

வேண்டாம் எனத் தெரிவித்திருந்தார். இதனால் கூட்டத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

“மாவை சேனாதிராஜா பதவி விலகிவிட்டார். அவரின் தலைமையில் கூட்டம் நடித்த முடியாது. எனவே, உடனடியாகக் கூட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்” – மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கடும் தொனியில் தெரிவித்தார்.

மாவைக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி வருவீர்களா எனக் கேட்குமாறு வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்த போது, “இது கோல் சென்ரர் அல்ல. இது கட்சி. இது உங்கள் வைத்தியசாலை அல்ல” – என்று இரா.சாணக்கியன் எம்.பி. பதில் அளித்தார்.

சாணக்கியன் மாத்திரம் அல்லாமல் ஏனைய சில உறுப்பினர்களும் கூட்டத்தை உடனே ஆரம்பிக்குமாறு கூறினர். இதனால் சிவமோகனுக்கும் அவர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.



கூட்டத்தை உபதலைவர் தலைமையில் உடனடியாக நடத்துங்கள், அல்லாவிடில் குழப்புவர்களை வெளியேற்ற வேண்டி வரும் என பீற்றர் இளஞ்செழியனும் தெரிவித்திருந்தார்.

தனது நிலைப்பாட்டில் சிவமோகனும் விடாப்பிடியாக நின்றமையால் நீண்டநேரமாகக் கூட்டம் ஆரம்பிக்கப் படாமல் அந்த இடம் போர்க்களமாக மாறியது. சிவமோகனுக்கு அருகில் எழுந்து சென்ற சுமந்திரன் அவரைச் சமாளிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதும் அது பலனளிக்கவில்லை.

இந்நிலையில், காலை 10.45 மணியளவில் கூட்டம் இடம்பெறும் மண்டபத்துக்கு மாவை சேனாதிராஜா தனது மகனுடன் வருகை தந்திருந்தார். இதன்போது, “உங்கள் தலைமையில் கூட்டத்தை நடத்த ஏலாது மாவை ஐயா. எனவே, அந்தக் கதிரையில் இருக்க வேண்டாம், இந்தப் பக்கம் இருங்கள்” – என்று சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

அதனைப் பொருட்படுத்தாத மாவை சேனாதிராஜா. முன்பகுதியில் உள்ள இருக்கையில் சென்று அமர்ந்தார். அதன் பின்னர் அங்கு அமைதி ஏற்பட்டதுடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், மாவையின் தலைமைக்கு எதிராக அங்கு கண்டனக் குரல்கள் எழுந்தமையால் ஐந்தரை மணி நேரம் நடைபெற்ற கூட்டம் இறுதியில் முடிவின்றி முடிந்தது.

**அநுர நாளை...**

17 ஆம் திகதி வரை டில்லியில் தங்கி இருக்கும் ஜனாதிபதி இந்திய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் பேச்சுகளில் ஈடுபடவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர், பிரதி நிதி அமைச்சர் ஆகியோரும் ஜனாதிபதியுடன் செல்லவுள்ளனர்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் சில புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் இந்த விஜயத்தின்போது கைச்சாத்திடப்படவுள்ளன.



## யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில்

# ஒருங்கிணைப்புத் தலைவருக்கான காரியாலயத்தை மாற்றியமைப்போம்

### மொட்டுவின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் கருத்து



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் யாழ். மாவட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், அலுவலக அறையைத் தேர்வு செய்தமை வருத்தமளிக்கின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி எனும் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடைமுறைகள் குறித்து ஆரம்பம் முதலே கரிசனை கொண்டுள்ளேன்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இதற்கு முன்பு செயற்பட்டவர்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் தமக்காகத் தேர்வு செய்த நிர்வாக / அலுவலக அறை மற்றும் இன்னபிற விவகாரங்கள் தொடர்பாக எனது நிலைப்பாட்டையும் எதிர்ப்பையும் அழுத்தமாக வெளியிட்டுள்ளேன்.

அந்தவகையில், மாற்றம் எனும் எண்ணக்கருவுடன் மக்கள் ஆணையைப் பெற்ற தேசிய மக்கள் கட்சியில் இருந்து புதிதாக யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் இராமலிங்கம் சந்திரசேகர், பழைய தலைவர்கள் சிலரைப் போலவே மாவட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், மாவட்ட செயலகத்தின் மையத்தில் தனக்கான அலுவலக மையத்தைப் பெற்றிருப்பது மக்களும் நானும் அவர்களிடம் எதிர்பாராத ஒரு செயற்பாடு ஆகும்.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தமக்கான அலுவலக மையத்தை அவர்கள் தேர்வு செய்வதற்கான இடம் சட்டத்தில் உண்டு என்றாலும், யாழ். மாவட்ட செயலகத்தின் வழமையான செயற்பாடுகள் பாதிக்கப்படாத வகையில் மாற்று இடம் ஒன்றைத் தேர்வு செய்ய முன்வருவார் என எதிர்பார்க்கின்றேன்."

– என்றார்.

மேலும், எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியில் இந்த முறைமை முழுமையாக மாற்றப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் அரசியல் தலைமைகளில் இருந்து முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டு , அதிகாரிகள் கௌரவமாகவும், பாரபட்சம் இன்றியும் அனைவருக்கும் சமனான சேவைகளைச் செயலகத்தினூடாக வழங்கப்பட ஆவண செய்வதுடன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்காக வலுக்கட்டாயமாக ஒதுக்கப்பட்ட அந்தக் காரியாலம், மேலதிக அரச அரச அதிபருக்கான காரியாலயமாகக் காணப்படும் நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிக்காலத்தில் குறித்த காரியாலயம் அந்தப் பதவியில் இருப்பவருக்கு மீள வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏழு விருதுகளைப் பெற்ற நல்லூர் பிரதேச செயலகம்






யாழ். நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட "வெளிச்சத்தின் விளக்கு" குறுநாடகம் சிறந்த நாடகப் பிரதியில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட அரச நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் விருது வழங்கும் நிகழ்வு – 2024 அவ்வமைச்சின் அமைச்சர் பேராசிரியர் ஹனிதம சுனில் செனெவி தலைமையில் நேற்று சனிக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட "வெளிச்சத்தின் விளக்கு" குறுநாடகம் சிறந்த நாடகப் பிரதியில் முதலாம் இடம்பெற்றது.

அத்துடன், சிறந்த நாடக நெறியாள்கையிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன் சிறந்த நடிகருக்கான விருது, சிறந்த நடிகைக்கான விருது, சிறந்த இசையமைப்புக்கான விருது என ஐந்து விருதுகளைப் பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான தேசிய ரீதியில் சிறந்த குறுநாடகம் என்ற விருதையும் பெற்றதோடு சிறந்த குறுநாடகத்தை அளிக்கை செய்த திணைக்களம் என்ற பாராட்டுச் சிறப்பு விருதையும் பிரதேச செயலாளருக்காகக் கையளிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகம் நேற்றைய நிகழ்வில் மொத்தமாக ஏழு விருதுகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் தொடர்பில் இந்தியத் தூதரின் கவனத்துக்கு!

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு



(விஜயரத்தினம் சரவணன்)

இந்திய உயர்ஸ்தானிகருக்கும், இலங்கைத் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் குறித்து தம்மால், இந்திய தூதர் சந்தோஷ் ஜாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்திய தூதர் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தார். ஜனவரியில் முல்லைத் தீவுக்கு விஜயம் மேற்கொள்வார் என்றும் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக மீனவதின நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு இந்தச் சந்திப்பில் இந்திய இழுவைப் படகுகள் எமது கடல் பகுதிகளுக்குள் அத்துமீறி வருகை தந்து, எமது மீனவ மக்களின் வாழ்வாதாரங்களைச் சூறையாடிச் செல்லும் விடயத்தையும் முன்வைத்திருந்தேன்.

நாம் கரையில் இருந்து பார்க்கும்போது தெரியக் கூடிய அளவில் வெளிச்சமிட்டவாறு இந்திய இழுவைப் படகுகள் செய்கின்ற அட்டகாசமான செயற்பாடுகளைப் பற்றி அவரிடம் மிக அழுத்தமாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்த வகையில் இந்திய மீனவர்களால் எமது மீனவர்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் தொடர்பில் அவரிடம் மிக விரிவாக எடுத்துக்கூறியிருந்தேன்.

இவ்வாறு அவரிடம் இந்த விடயத்தை முன்வைத்து நான் பேசும்போது ஏனைய தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாகப் பேசியிருந்தனர்.

இதன்போது தூதர் சந்தோஷ் ஜா இதற்குப் பதிலளிக்கும் போது, இந்த இழுவைப் படகுகள் அத்துமீறி நுழையும் விடயத்தில் கவனம் செலுத்துவேன். எதிர்வரும் ஜனவரியில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இது விடயமாக வருகை தரவுள்ளேன் என்று தெரிவித்தார்.

இவ்வாறாக இந்த விடயங்களில் நாம் தொடர்ந்தும் அவதானம் செலுத்திக் கொண்டே இருக்கின்றோம்.

இதுமாத்திரமின்றி நாடாளுமன்றத்தில் பேசக்கிடைக்கும் நேரங்களிலும் இந்த விடயம் தொடர்பில் பேசுவோம்.

இந்திய இழுவைப் படகுகள் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சூறையாடுவதற்கு எதிராக இதற்கு முன்னர் எவ்வாறு குரல்கொடுத்து வந்தோமோ அதேபோல் தொடர்ந்தும் இந்த விடயத்தில் குரல்கொடுப்போம்.

அதேபோல தென்னிலங்கைமீனவர்களின் தடை செய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவும் தொடர்ந்தும் நாம் குரல்கொடுப்போம்.

இந்த விடயங்கள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடனும் பேசியிருக்கின்றேன்.

குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக கடற்றொழில் அமைச்சரும் உறுதியளித்திருக்கின்றார்.

அதேவேளை, இந்தக் காற்றாலைத் திட்டம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த நாள்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது மன்னாருக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராயும்போது, அங்குள்ள மக்கள் கூடுதலாக இந்த காற்றாலைத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் தெரிவித்திருந்தனர்.

அந்தவிடயம் தொடர்பிலும் பேசியுள்ளோம். காற்றாலைத் திட்டத்தால் மன்னாரில் உள்ள பாதிப்பு நிலைமைகள் குறித்தும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.


அத்தோடு யாழ்ப்பாணத்துக்கும் இந்தக் காற்றாலைத் திட்டத்தைக் கொண்டுவரப் போவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே யாழ்ப்பாணம் காற்றாலை தொடர்பான விடயங்களையும், மன்னார் காற்றாலை தொடர்பான விடயங்களையும் உரியவர்கள் விரிவாக எம்மிடம் கையளியுங்கள்.

மன்னாரில் கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்சினையும் காணப்படுகின்றது. முல்லைத்தீவில் மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்த காலத்தில், கொக்கிளாயில் கனிய மணல் அகழ்வுக்கென மக்களின் காணிகள் சுமார் 44 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதன்பிற்பாடு கனியமணல் அகழ்வுக்காக அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் எமது போராட்டங்களால் கைவிடப்பட்டிருக்கின்றன.

சட்டவிரோத கடற்றொழில்கள் என அரசால் அறிவிக்கப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகள் அனைத்தையும் முற்றாகத் தடைசெய்து, எமது மீனவர்களின் முறையான கடற்றொழில் செயற்பாடுகளுக்கு உதவவேண்டும். இந்திய இழுவைப் படகுகளால் எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும். இந்த விடயங்களுக்காக நாம் தொடர்ந்தும் குரல் கொடும்போம். – என்றார்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேவை: ஒரு பாலா!

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் பதினெட்டாவது நினைவு தினம் இன்றாகும்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் யுத்த களத்துக்கு வெளியில் அளப்பரிய சாணக்கிய சாதனைகளைத் தமது இராஜதந்திர நகர்வுகள் மூலம் அரங்கேற்றிய ஒப்புயர்வற்ற மதியூகத் தளபதி அவர்.

சமாதான மேசைகளிலும், சமரச முயற்சிகளிலும், அரசியல் பிரமுகர்களுடான உரையாடல்களிலும், பிற தலைவர்களுடான வெளிப்படையான சந்திப்புகளிலும், இரகசிய நகர்வுப் பேச்சுகளிலும் அவர் ஈட்டியவையும் ஆற்றியவையும் வெளியில் அம்பலமாகா விடயங்கள் பல பொதிந்தவை.

தமிழர் தேசத்துக்கு மிக முக்கியமான மதியூகி ஒருவர் மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட சமயத்தில் அவர் நம்மை விட்டுப் பிரிந்தமைதான் மீளவே முடியாத நமது பல பின்னடைவுகளுக்குக் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

“காலம் என்பது பல நினைவுகளைத் தின்று செரித்துவிடக்கூடியது. ஆனால் சில இழப்புக்களும் பிரிவுகளும் காலத்தால் தின்று தீர்த்துவிட முடியாதவை. கால உடைப்பில் சிதறுண்டு போகாத அத்தகைய ஒரு பேரிழப்புத்தான் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடையது. அவரின் இழப்பினூடாக விழுந்த வெற்றிடம் என்றுமே இட்டு நிரப்பப்பட முடியாதது. ஆனால் நிரப்பப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த வெற்றிடம் அப்படியே வெறுமையாகவே கிடக்கிறது.” - பாலசிங்கத்தின் மறைவின் பின்னர் சில ஆண்டுகள் கழித்து அனபர் ஒருவர் எழுதிய இந்தக் கருத்து இன்றும் பொருந்தி நிற்பது கண்கூடு.

“அரச வன்முறைக்குள்ளாகி நிர்க்கதியாகி, நிராயுபாணிகளாக இருக்கும் மக்களின் ஒரே ஆயுதம் ‘பயங்கரவாதம்’ மட்டுமே” என்று வாதிடுகின்றார் இருப்பியல் கருத்துலகைப் படைத்த தத்துவாசிரியர்கள் வரிசையில் ஒருவரான ஜோன் போல் சாத்தர்.

‘நீதி என்பது அரசின் வன்முறை, வன்முறைஎன்பதுமக்களின்நீதி’என்றகருத்தியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையின் அடிநாதமாக இருக்கும் வன்முறையை சிலாக்கிக்கின்றார் சாத்தர்.

அதனைத்தான் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தனது தத்துவார்த்த விவாதங்களின் மூலம் உலகுக்கு நியாயப்படுத்தி நின்றார் பாலசிங்கம்.

தமிழ் மக்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை, இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தை அடக்கி, ஒடுக்கி நின்ற பௌத்த - சிங்களப் பேரினவாதம் தன் பிரசார வலிமை மூலம் ‘பயங்கரவாதம்’ என அடையாளப்படுத்த முயன்றபோது, அதை மறுத்துரைத்து, சிங்கள அரசு முன்னெடுப்பதே ‘அரச பயங்கரவாதம்’ என்றும், அதிலிருந்து தமிழினம் தன்னைப் பாதுகாத்து, தனது வாழ்வியல் உரிமைகளையும், இருப்பையும் தக்க வைப்பதற்காக நடத்துவது தற்காப்பு விடுதலைப் போராட்டம் என்றும் சர்வதேச மட்டத்தில் தனது சொலாடல் திறமையால் வாதிட்டு, அந்தக் கருத்தை ஆணித்தரமாக நிலைநாட்டி வந்தவர் பாலசிங்கம்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எண்பதுகளில் இருந்து மிலேனியத்தின் முதல் தசாப்தம் வரை ஒருபுறம் கொடூர யுத்தமாகவும், மறுபுறம் சர்வதேச தரப்புகளின் மத்தியஸ்தம் மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய ச மாதான சமரச நகர்வுகளாகவும் இரட்டைத் தடத்தில் கட்டவிழ்ந்தது. அதில் பின்னையதில் - அமைதிப் பேச்சுகள் அல்லது சமரச முயற்சிகள் என்ற இராஜதந்திர நகர்வுகளில் - தமிழர்களின் தானைத் தளபதியாக விளங்கியவர் பாலசிங்கம்.

ஈழத் தமிழர்களின் கடந்த ஐந்நூறு வருட சரித்திரத்தில் சர்வதேசத்தைத் தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த ஒரேயொரு இராஜதந்திரி பாலசிங்கம் மட்டுமே.

இன்று அல்லலுற்று, அவலப்பட்டு, தடுமாறி நிற்கும் தமிழினத்துக்கு வழிகாட்ட அத்தகைய மதியூகி ஒருவரே அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றார். ஆனால் அதுதான் தமிழர் தேசத்துக்குக் கிட்டாத வாய்ப்பாக இருக்கின்றது.

# அட்டாளைச்சேனை பிரதேசத்தின் அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டம்



( எம் எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் பி.ரீ.எம். இர்பான் தலைமையில் இடம்பெற்றது. இதில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அபூபக்கர் ஆதம்பாவா மற்றும் எம். எஸ். உதுமாலெப்பை ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த வாரங்களில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

அவ்விடயங்கள் தொடர்பாக விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, வீதி, கால்நடை, வடிகான், கல்வி, சுகாதாரம், மின்சாரம் பாதுகாப்பு துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளால் தீர்வுகளும் முன்வைக்கப்பட்டு சில பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வும் காணப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ், அட்டாளைச்சேனை ஜும்மா பள்ளிவாசல் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல். அனீஸ், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட், துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விடயத்துக்குப் பொறுப்பான உத்தி



யோகத்தர், கிராம நிலதாரிகள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் விவசாய பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.








# 3 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் இந்த வாரம் சந்நிதி ஆச்சிரமத்தில்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் இடம் பெறும் நிகழ்வு ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று (13) வெள்ளிக்கிழமை ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

இதில் ஆன்மீக அருளுரையை "நாமங்களின் பெருமை" என்ற ஆன்மீகத் தலைப்பில் ஆசிரியர் உமாராணி பேரானந்தம் நிகழ்த்தினார்.

அத்துடன் மணல்தெரு, கம்பர்மலையை சேர்ந்த கம்பர்மலை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி, தையிட்டி வடக்கு, மயிலிட்டியை சேர்ந்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி, பலாலி தெற்கு, வயாவிளானைச் சேர்ந்த அச்சுவேலி சரஸ்வதி வித்தியாவயத்தில் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்கு ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 200 பெறுமதியில் வழங்கப்பட்டது.

பண்டாரவளையை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு வீடு திருத்தச் செலவுக்காக ஒரு லட்சம் ரூபா நிதி வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

அதேஇடத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு மருத்துவச் செலவுக்காக ஒரு லட்சம் ரூபா நிதியும் அவர்களது வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.

இன்றைய இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகிகள், தொண்டர்கள், அடியவர்கள் கலந்துகொண்டனர்.

# கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்களால் அம்பாறையில் போக்குவரத்து அவலம்!




(பாறுக் ஷிஹான்)

கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்களால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் போக்குவரத்து சிரமங்கள் தொடர்பில் பொது மக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளான நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது மற்றும் நகரப் பகுதிகளில் அதிக கட்டாக்காலி மாடுகள், நாய்கள் உலா வருகின்றன.

இதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடும் பொது மக்கள், வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதிகமான மாடுகள், நாய்கள் வீதியிலேயே படுத்து உறங்குவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வீதியில் நாய்கள் நடமாடுவதோடு பல நாய்கள் பொலிஸ் நிலையம் செல்லும் வாசலில் வீதியில் படுத்துறங்குகின்றன.

எதிர்பாராத நேரத்தில் வாகனங்களுக்குக் குறுக்காகப் பாயும் நாய்களால் விபத்துகள் ஏற்படும் நிலைமையும் தோன்றியுள்ளது.

எனவே சமூகநலன் கருதி மாநகர சபை மற்றும் பிராந்திய சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# பால்நிலை சார் வன்முறைகளை தடுக்கும் விழிப்புணர்வு செயற்பாடு






(த.சுபேசன்)

நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் பால்நிலை சார் வன்முறைகளை தடுக்கும் விதமாக செவ்வாய்க்கிழமை கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை முன்றலில் வைத்து பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

'பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றுபடுவோம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற 16 நாள் செயற்பாட்டு நிகழ்வின் இறுதி நாளில் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டும் விழிப்புணர்வு நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன் மற்றும் கிறிசலிஸ் நிறுவன திட்ட இயக்குனர் அஹமட் ரிஸ்லான் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது "பெண்களின் பாதுகாப்பு நம் அனைவரதும் பொறுப்பு, பெண்களின் பாதுகாப்பான பயணத்தில் நாமும் கண்ணியத்துடன் பங்கு கொள்வோம்" ஆகிய வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# கட்டுப்பாட்டு விலைகளில் அரிசியை பெறமுடியாத நிலையில் தோட்ட மக்கள்



(மஸ்கெலியா)

மலையகத் தோட்டங்களின் உட்பகுதிகளில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

மலையக பெருந்தோட்டங்களில் உள்ள தோட்ட கடைகளில் ஒரு கிலோ நாட்டு அரிசி 250 முதல் 260 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தாங்கள் மிகுந்த சிரமத்துக்னு ஆளாகி உள்ளனர் என்று தெரிவிக்கின்றனர்.

தாம் பெரும்பாலும் நாட்டு அரிசியையே பயன்படுத்துகின்றனர் என்றும் தோட்ட உள்ளகக் கடைகளில் இருந்து 230 ரூபாவுக்கு அரசு கட்டுப்பாட்டு சில்லறை விலையான நாட்டு அரிசியை வழங்குவதில்லை எனவும் தோட்டத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அரிசியின் விலையேற்றம் காரணமாக ஏனைய நாள்களில் கிடைக்கும் அரிசியின் அளவைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பாலும் அரிசியின் அளவைக் குறைத்து உணவு தயாரிக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

அரிசி மற்றும் தேங்காய் விலை பாரியளவில் அதிகரித்துள்ளமையால் தாம் பொருளாதாரச் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

தோட்டத்தின் பிரதான நகரங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சலுகை விலையில் அரிசி மற்றும் தேங்காயைப் பெற்றுக் கொள்ளும் முகவர் இல்லை எனவும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட வர்த்தக அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.



# கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் காரைதீவு - கல்லடி இணைச் சம்பியன்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகமும், ஏ.எஸ்.சி.ஓ. அமைப்பும் இணைந்து நடத்திய கூடைப் பந்தாட்ட சுற்றுப்போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகமும் கல்லடி சிவானந்தா விளையாட்டுக் கழகமும் இணைச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

இந்தப் போட்டி காரைதீவு விபுலானந்தா விளையாட்டு மைதானத்தின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

இரண்டாவது வருடமாக இடம் பெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில், காரைதீவு கூடைப்பந்தாட்ட கழக அணியும் சிவானந்த விளையாட்டு கழக அணியும் மோதின.

இறுதி வரைக்கும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் 55:55 என்ற புள்ளி அடிப்படையில் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவுற்றது.

விளையாட்டு உத்தியோகத்தர் பத்மநாதன் வசந்த் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை செயலாளர் ஏ. சுந்தரகுமார், அஸ்கோ அமைப்பின் செயலாளர் சி. நந்தகுமார், சிவானந்த விளையாட்டு கழகத் தலைவர் ரி. ஜெகன், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி. ராஜேந்திரன், விளையாட்டு உத்தியோகத்தர் வி. பாஸ்கரன், இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ். ராதிந், விவேகானந்தா விளையாட்டு கழகத் தலைவர் வி.தயாபரன், ரிமைண்டர் விளையாட்டு கழகச் செயலாளர் எஸ்.மயூரவேல் ஆகியோர் கலந்துகொண்டு கிண்ணங்களையும் பதக்கங்களையும் வழங்கினர். பத்மநாதன் மதிராஜ் போட்டி வர்ணனையாளராக செயற்பட்டார்.

# கிழக்கு மாகாணக் கல்வித் துறையில் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுங்கள்

## இம்ரான் எம்.பி. ஆளுநரிடம் கோரிக்கை



கிழக்கு மாகாண கல்வித் துறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் ஆளுநரை சந்தித்து உரையாற்றும் போதே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் விடுத்த கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு,

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணி புரியும் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் வெளிநாட்டு விடுமுறை மற்றும் வெளிநாடுகளின் சமய யாத்திரைக்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதி உரிய காலத்தில் வழங்கப்படாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக உரிய திகதிக்கு சில மாதங்களுக்கு முன் விண்ணப்பித்தாலும் அனுமதி உரிய காலங்களில் வழங்கப்படுவதில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது. அனுமதியை எதிர்பார்த்து காத்திருக்கும் இவர்கள் தொடர்ந்து கடமைக்குச் செல்கின்றனர். எனினும், இவர்கள் விண்ணப்பித்த லீவுத் திகதியிலிருந்து வலயக் கல்வி அலுவலகங்களினால் சம்பளம் இடைநிறுத்தப்படுகின்றது. நிர்வாகச் சீர்கேடுகளால் இந்த அசௌகரியம் ஏற்படுகின்றது.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களின் கோவைகள் மாதக் கணக்கில் மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சில் தேங்கியிருப்பதாகவும் இதனை விரைவுபடுத்த லஞ்சம் எதிர்பார்க்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதேபோல வெளிநாட்டு லீவு அனுமதியிலும் பாரபட்சம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, தயவு செய்து இதன் உண்மைத் தன்மைகளை அறியும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.- என்று தெரிவித்துள்ளார்.





# சாய்ந்தமருது பிரதேச உணவகங்களில் பாவனைக்கு உதவாத உணவு அழிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீன் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே .மதன் தலைமையிலான குழுவினர் சாய்ந்தமருது பிரதேச உணவகங்களில் திடீர் பரிசோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உணவகங்களில் திடீர் பரிசீலனை செய்யப்பட்டது. இதில் உணவகங்கள், வெதுப்பகங்கள், மரக்கறி, மீன் விற்பனை நிலையங்கள், பலசரக்கு கடைகள், இனிப்புக் கடைகள் என்பன பரிசீலிக்கப்பட்டன.

இதன் போது பழுதடைந்த பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் சில நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் உணவு சுகாதாரம் மீதான கண்காணிப்பு தொடரும் எனறும் இறுக்கமான சட்ட நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சாய்ந்தமருது பொலிவேரியன் மக்களுக்கு நேசக்கரம் நீட்டிய பிரதேச செயலக நலன்புரி



(நூருல் ஹுதா உமர்)

சீரற்ற காலநிலையால் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்திலுள்ள எகெட் வீட்டுத்திட்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் நிதி பங்களிப்புடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளரும் நலன்புரி அமைப்பின் தலைவருமான எம். எம். ஆஷிக் தலைமையில் இடம்பெற்றது.

ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக இந்தக் குடும்பங்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கற்றல் உபகரணங்கள் உட்பட உடமைகளும் பெருமளவு சேதமடைந்துள்ளன. பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைக்கு உடன் உதவும் முகமாகப் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் உள்ளிட்ட நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கையை அடுத்து 100 பிள்ளைகளுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃப்பிகா, சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம். ரம்ஸான், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.சீ.முஹம்மட், நிதி உதவியாளர் ஏ.எம்.றியாஸ் உள்ளிட்ட கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்களுக்காக செயற்பட்டு வந்த பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரி அமைப்பானது முதல் தடவை பிரதேச செயலாளரும் நலன்புரி அமைப்பின் தலைவருமான எம். எம். ஆஷிக்கின் தூர நோக்கு சிந்தனை காரணமாக இந்த உதவித் திட்ட செயல்பாடு வெற்றிகரமாக இடம்பெற்றது.





# கொடிகாமத்தில் மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு!

## சந்நிதியன் ஆச்சிரமத்தால் நேற்று வழங்கப்பட்டது

இயற்கை பேரிடரில் ஒன்றான வெள்ள அபாயத்தால் பாதிக்கப்பட்ட கொடிகாமம் பகுதி மக்களுக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் நேற்று வெள்ளிக்கிழமை (13) நூற்றுக் கணக்கான மதிய உணவுப் பொதிகளை வழங்கியது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கும், தவசிகுளம், பாலாவி வடக்கு போன்ற கிராம மக்களுக்கும் 260 உணவுப் பொதிகள் ஆச்சிரமத் தொண்டர்களால் வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு உதவி

## கனடியத் தமிழர் பேரவை வழங்கியது









கனடியத் தமிழர் பேரவை வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையத்துடன் இணைந்து, மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரண் மற்றும் ஏறாவூர் பிரதேச சபை பிரிவுகளில் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு கடந்த புதன் கிழமை வெள்ள நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

இலங்கையில் சிறு குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட இந்தக் குடும்பங்களுக்கு சத்துமா பொருள்கள் இதன்போது வழங்கப்பட்டன. இந்த சத்தான உணவுப் பொதிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெண்களால் உதயம் ஆற்றல் உணவு உற்பத்தியாளர் குழுவால் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது.

சி.ரி.சி. மற்றும் நீட் நிலையத்தின் இந்த வெள்ள நிவாரணப் பணியானது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினதும், ஏறாவூர் மற்றும் கிரண் பிரதேச செயலகங்களதும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

கனேடியத் தமிழர் பேரவை உள்ளூரிலும் உலக அளவிலும் தேவைப்படும் சமூகங்களை ஆதரிப்பதில் என்றும் உறுதியாக உள்ளது. இந்தப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மிகவும் பாதிக்கப்படக் கூடிய குடும்பங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டு உதவிய தாராள மனப்பான்மை கொண்ட நன்கொடையாளர்கள் மூலமே இந்த முயற்சிகள் சாத்தியமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

















# பேராசிரியர் க. கைலாசபதியின் 42 ஆவது நினைவு தின நிகழ்வு

பேராசிரியர் க. கைலாசபதியின் 42 ஆவது நினைவு தின நிகழ்வு செம்புலம் மக்கள் கூடத்தின் ஏற்பாட்டில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் பேராசிரியரின் துணைவியார் திருமதி சர்வமங்களம் கைலாசபதி மற்றும் புதல்வி பேராசிரியர் பவித்ரா கைலாசபதி ஆகியோர்கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வுக்கு பவானி முகுந்தன் தலைமையேற்க தொடக்க உரையை செம்புலம் மக்கள் கூடத்தின் இணைச் செயலாளர் சி. கிருஷ்ணபிரியன் நிகழ்த்தினார்.

அத்தோடு "இலக்கியத்தின் சமூகவியல் இயங்குதளம் – பேராசிரியர் க. கைலாசபதியை முன்வைத்து" என்ற தலைப்பில் ஆய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர். எம். ஜெயசீலன் நிகழ்த்தினார்.

பார்வையாளர்களை மகிழ்விக்க கவியரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கவியரங்கை கவிஞர் ரக்ஷானா ஷரிபுத்தீன் தலைமையேற்று வழிநடத்தினார். ச.அருணன், இரா.தனுஷா, க.ஜெயகாந்த், இந்திரா ஜெயபாரதி ஆகிய நான்கு கவிஞர்களும் தங்கள் கவிதைகளால் சபையோரை மகிழ்விக்கவித்தனர். நிகழ்வை செல்வி இரா. தானுசா தொகுத்து வழங்குகினார் . இறுதியாக செல்வன் நித்தேஷ் நாராயணின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.



- ஐங்கரன்
விக்கினேஸ்வரா -



## சிரிய எல்லைகளை ஆக்கிரமிக்கும் இஸ்ரேல்:

# அசாத் ஆட்சியின் பின்னரான எதிர்காலம்?

சிரியாவில் இஸ்ரேலிய அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் (Golan u;eights) குன்றுகளுக்கு இடையே உள்ள இராணுவ மற்ற பாதுகாப்பு வலயத்துக்கு (Buffer Zone) மீண்டும் தனது தரைப்படைகளை நகர்த்தி உள்ளது.

அத்துடன் சிரியாவில் உள்ள ஆயுதங்கள் கிளர்ச்சியா ளர்களின் கைகளுக்கு செல்வதை தடுக்க, அங்கு தொடர் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளது. இதில் சிரியா வின் ஆயுத கிடங்குகள் பலவும் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

**கிளர்ச்சியாளர்கள் கையில் இரசாயன ஆயுதங்கள்**

வான் தாக்குதலை தீவிரப்படுத்தும் இஸ்ரேல் அரசு, சிரியாவில் உள்ள ஆயுதக் கிடங்குகளை குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தாக்குதல் சிரியாவின் ஆட்சி மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பத்துக்கு மத்தியில் இஸ்ரேல் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

கிளர்ச்சிப் படைகள் ஆட்சியை கைப்பற்றியுள்ள நிலை யில், கிளர்ச்சியாளர்களின் கையில் ரசாயன ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகள் சென்று சேர்வதை தடுக்க இஸ்ரேல் முயற்சிப்பதாக தெரிவித்துள்ளது.

அல் கொய்தா போன்ற அமைப்புகளுடன் தொடர்பு டைய கிளர்ச்சிப் படைகளின் வளர்ச்சியை தடுக்க இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சிரியா முழுவதும் உள்ள ஏவுகணைகள் அனைத்தையும் அழிப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

**சிரிய ராணுவ இலக்குகள் குறிவைப்பு**

சிரியா முழுவதும் உள்ள இலக்குகள் மீது அதன் போர் விமானங்கள் நானூறுக்கும் மேற்பட்ட வான்வழித் தாக் குதல்களை நடத்தியதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை கூறியுள்ளது.

சிரிய அரசு கிளர்ச்சியாளர்களால் ஞாயிற்றுக்கிழமை தூக்கியெறியப்பட்டதிலிருந்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளது என்று பிரித்தானி யாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு (எஸ்ஓஎச்ஆர்) கூறியது.

ஆயினும் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட ஒரு அறிக்கையில், இஸ்ரேல் அரசை அச்சுறுத்தும் மூலோ பாய திறன்களை அழிப்பதை இஸ்ரேலிய படையினரின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொடராக சிரியாவின் கடற்படை, இராணுவ தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து அந்நாட்டு இராணுவம் விட்டுச் சென்ற ஆயுதங் களை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடந்த இரு நாள்களில் நூற்றுக்கணக்கான சிரியாவின் கடற்படை மற்றும் பிற இராணுவச் சொத்துக்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

லதாகியா மற்றும் எல் பெய்டா விரிகுடாவின் துறைமுகப் பகுதியில் இஸ்ரேலிய ஏவுகணைக் கப்பல்கள் அசாத்தின் படைகளுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல்களை அழித்-தன. அவை பல நூறு மைல்கள் வரை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளை கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இரசாயன ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைத்தால், அவற்றை இஸ்ரேலுக்கு எதிராக பயன்படுத்த முடியும் என்ற காரணத்தால், அவை கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைப்பதை தடுக்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் அரங்கேற்றப்பட்டதாகவும் கூறியுள்ளது.

**சிரிய கடற்படையை அழிக்க முயற்சி**

இத்துடன் சிரிய கடற்படையை அழிக்கும் நடவடிக்கை

தொடர்ச்சி▼





## சிரிய எல்லைகளை ஆக்கிரமிக்கும் இஸ்ரேல்:

# அசாத் ஆட்சியின் பின்னரான எதிர்காலம்?

தொடர்ச்சி▲

பெரும் வெற்றி பெற்றதாகவும் இஸ்ரேலிய அரசு அவர் தெரிவித்துள்ளது. சிரிய தலைநகர் டமாஸ்கஸ், ஹோம்ஸ், டார்டஸ் மற்றும் பால்மைராவில் உள்ள விமானநிலையங்கள், இராணுவ வாகனங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் ஆயுத தயாரிப்பு தளங்கள் உட்பட, பரந்த அளவிலான இலக்குகள் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல்கள், ஆயுதக் கிடங்குகள், வெடிமருந்துக் கிடங்குகள் மற்றும் கடல் ஏவுகணைகளையும் குறிவைத்து அரங்கேற்றப்பட்டுள்ளது.

### சிரியாவை ஆக்கிரமிக்க முயற்சியா?

இஸ்ரேல் திடீரென பயங்கர தாக்குதல் நடத்தியதால், சிரியாவை கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளதாக தகவல் பரவியது. இதை மறுத்த இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள், சிரியா எல்லையில் உள்ள இஸ்ரேலின் பகுதியை கைப்பற்றத்தான் ராணுவம் நுழைந்தது. சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி இஸ்ரேல் டாங்கிகள் செல்கின்றன என்ற செய்தி தவறானவை என்றனர்.

அத்துடன் தெற்கு சிரியாவை ராணுவ பலம் அற்றதாக மாற்ற இந்த தாக்குதல் அவசியம். அசாத் ஆட்சியை பின்பற்ற முயற்சிக்கும் எந்த ஒரு படைக்கும் இதே கதிதான் ஏற்படும். சிரியா எல்லையில் ஹிஸ்புல்லா போன்ற அமைப்புகள் மீண்டும் தீவிரவாத தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்காக ஆயுத கிடங்குகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ. நா. கடும் கண்டனம்

சிரியா எல்லையில் ஆக்கிரமிப்பு பகுதிக்குள் இஸ்ரேல் நுழைந்ததற்கு எகிப்து, ஜோர்டன், துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. சிரியாவின் நிலையற்ற தன்மையை, தனது எல்லையை விரிவுபடுத்தும் நோக்கத்துக்கு இஸ்ரேல் பயன்படுத்தி கொள்கிறது என்று அந்த நாடுகள் குற்றம்சாட்டியுள்ளன.

சிரியாவின் ஒரு பகுதிக்குள் இஸ்ரேல் ஊடுருவியது 1974 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறுவதாக உள்ளது என்று ஐ.நா. சபை குற்றம் சாட்டியுள்ளது.

### ரஷ்ய இராணுவ தளங்கள் வாபஸ்

கிரெம்ளின் அரசின் கூட்டாளியான ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், சிரிய பிரதேசத்தில் ரஷ்யாவின் விமான மற்றும் கடற்படை தளங்கள் அகற்றப்பட்டுள்ளன.

சிரியாவில் ரஷ்யாவுக்கு இரண்டு இராணுவ தளங்கள் இருந்தன. மத்தியதரைக் கடலோரத்தில் உள்ள டார்டஸ் கடற்படை தளம் இருந்தது.

அத்துடன் லதாகியா துறைமுக நகரத்திற்கு அருகிலுள்ள க்மெய்மிம் விமான தளம் உள்ளது. அவை கிரெம்ளினின் மிகவும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இராணுவப் புறக்காவல் நிலையங்களாகக் கருதப்பட்டன.

ரஷ்யாவிற்கு மத்தியதரைக் கடலுக்கான ஒரே நேரடி அணுகல் மற்றும் கடற்படை பயிற்சிகள், போர்க் கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நடத்துவதற்கான தளம் ஆகியவற்றை வழங்குகிறது. இதனால் டார்டஸ் தளம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது.





கு.லோகிதா,
ஊடகத் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# சிறுவர்களும் கார்ட்டூன்களும்

“இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்” போன்ற சிறுவர்களை முன்னிறுத்திய மகுட வாசகங்கள் எல்லாம் மீண்டும் வாசகங்களாக மட்டுமின்றி செயல் வாதங்களாக முன்னெடுப்பதற்கான காலம் உருவாகி உள்ளதாகவே சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இவ்வுலகமானது சிறுவர்களால் இணைந்து பிணைக்கப்பட்டுள்ளதால் அவர்களை பாதுகாக்க வேண்டியது ஒரு கடமையாக காணப்படுகிறது .

பல்வேறு தொழில் நுட்பங்களாலும் இணையங்களாலும் மூழ்கி போன உலகமானது பல்வேறு மனிதர்களையும் ஆட்கொண்டு வருவதுடன் அது சிறுவர்களையும் விட்டு வைத்து விடவில்லை. தாத்தா பாட்டியின் அரவணைப்பில் இருந்து அவர்களது கதைகளையும் பாடல்களையும் தாயின் பாடல்களை எல்லாம் மறந்து தற்போது ஊடகங்களின் மடியில் உறைகின்ற காலமாகப் போய்விட்டது.

கடந்த காலங்களில் சில நடத்தை மாற்றங்கள் காரணமாகவும், பெற்றோர்கள் வேலைகளுக்குச் செல்வதாலும் பிள்ளைகள் நேரத்தைக் கழிப்பதற்கு முடியாத காரணங்களால் அவர்களைச் சமாளிப்பதற்காகத் தொலைக்காட்சி, தொலைபேசிகளில் காட்டூன்களைக் கொடுத்துப் பழக்குகிறார்கள் . இந்த ஆரம்பமானது அவர்களுக்கு அதற்கு உள்நுழைந்து தங்களை முழுமையாக ஆட்படுத்தி வருகின்ற நிலைக்கு உட்படுத்துகிறது.

உலகில் கிட்டத்தட்ட 80 வீதமான சிறுவர்கள் தங்களைக் காட்டூனுக்குள் உட்படுத்தி வருகின்றனர். இது வளர்ச்சி அடைந்து வருவதுடன் இதனை அனிமேஷன்களாக பயன்படுத்தி குழந்தைகளை கவரும் விதத்தில் நகைச்சுவை, விலங்குகள், ஸ்பைடர் மேன் போன்ற பல்வேறு வடிவங்களை பயன்படுத்தி சிறுவர்களின் மனதில் உடனடியாக இடம் பிடிக்கக் கூடிய வகையில் வடிவமைத்து வருகின்றனர்.

அத்துடன் சிறுவர்களின் மையமாகக் கொண்டு youtube, Netflix, Disney+, prime vedio போன்ற இணைய தளங்கள் சிறுவர்களுக்காக கார்ட்டூன்களை தயாரித்து வெளியிட்டு வருகின்றன. அவற்றில் Disney+ எங்க தளமானது 2024 ஆம் ஆண்டு அமெரிக்காவினுடைய அறிக்கையின்படி ஏப்ரல் மாதம் வரை 7.6 வீதமான சிறுவர்கள் அதிகமாக பார்வையிட்ட தளமாகவும் காணப்படுகின்றது. அதனை அடுத்ததாகவே லழரவரடிந சேனல் காணப்படுகிறது. அது 19.33 வீதத்தைக் கொண்டு காணப்படுகிறது. ஒரு நாளில் 1 -2 மணித்தியாலங்களில் 40 வீதமான சிறுவர்கள் பார்வையிட்டதுடன் தினந்தோறும் 65.2 வீதமான சிறுவர்கள் தங்கள் பொழுதைக் காட்டூன்களை பார்த்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறுவர்கள் காட்டூன்களுடன் இணைந்து வருவதால் அவர்களுக்கு பல்வேறு விதமான பிரதிகூலங்களை ஏற்படுத்தி வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

கண்பார்வையானது குறைவடைந்து போவதற்கான வாய்ப்புகள் காணப்படுகிறது. ஏனெனில் இவர்கள் தங்களுடைய நாள் பொழுதை அதிகமாக தொலைபேசியுடனும் தொலைக்காட்சிகளினுடனும் கழித்து வருவதால் அவர்களுடைய பார்வை குறைவடைந்து செல்வதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

மற்றும் மூளை வளர்ச்சி குறைவடைய செய்வதற்கு இந்தக் காட்டூன்கள் ஒரு காரணமாக காணப்படுகின்றன. ஏனெனில் காட்டூன்களை பார்க்கும்போது ஒரே மன நிலையுடன் அதைப் பார்ப்பதாலும் விரக்தி கொண்டு அதை பார்க்கின்ற போது அந்த செயல் அவர்களின் மூளை வளர்ச்சியை பாதிக்கும் ஒரு செயலாகவும் காணப்படுகிறது.

வேறு விதமான சிந்தனைகள் குறைவடைந்து கொள்வதுடன் முழு நேரத்தையும் கார்ட்டூன்களின் சிந்தனைகளிலேயே காணப்படுவதால் அவர்களுடைய சிந்தனை போக்கானது மாற்றமடைந்த செல்கின்ற தன்மையும் காணப்படலாம்.

மற்றும் வன்முறை சித்திரங்கள் ஏற்படலாம். ஏனெனில் கார்ட்டூன்களில் வெவ்வேறு விதமான முறைகள் வெளியிடப்படுவதால் உதாரணமாக ஸ்பைடர் மேன் என்ற கார்ட்டூன் பார்க்கின்ற போது தாங்களும் அவரை போல் இருக்க வேண்டும் என நினைத்து தவறான முடிவுகளை எடுத்து உயிர் இழந்த சம்பவங்களும் காணப்படுகின்றன.

இதனால் அவர்களுடைய மனதில் வன்முறைகள்

தொடர்ச்சி▼

# சிறுவர்களும் கார்ட்டூன்களும்

தொடர்ச்சி▲

வெவ்வேறு விதமான தோன்றுவதற்கும் இவை காரணமாக அமையலாம். மற்றும் மோசமான வார்த்தை பிரயோகங்கள் அவர்களில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படும். ஏனெனில் சில காட்டூன்களில் அருவருப்பான வார்த்தைகளை பயன்படுத்துவதால் அவற்றைப் பார்க்கும் சிறுவர்களுக்கு அவ்வாறான வார்த்தைகளை அவர்களும் உச்சரிக்க தொடங்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

அடுத்ததாக கார்ட்டூன்கள் ஊடான நாள் பொழுது அதாவது பெற்றோர்கள் தங்களின் வேலைகளுக்காகவும் குழந்தைகளுடன் நேரத்தைச் செலவழிப்பதற்கு நேரம் போதாமையாலும் சிறுவர்களுக்கு இதனை பழக்குவதற்கு அவர்களே ஒரு காரணமாகவும் காணப்படுகின்றன.

இதனை பார்த்து பழக்கப்பட்ட இவர்கள் தங்களுடைய வாசிப்பு பழக்கத்தையும், புத்தகப் பழக்கத்தையும் விடுத்து தங்களுடைய நாள்களை உணவு உண்கின்ற போதும், நித்திரை செய்கின்ற போதும் போன்ற அனைத்து செயல்பாடுகளிலும் இந்த கார்ட்டூன் தங்களோடு இணைந்த ஒரு மாற்றுத் தாயாகவே பயன்படுத்தி வருகின்றன.

இவ்வாறு சிறுவர்களில் மத்தியில் ஏற்படுத்திய கார்ட்டூன் பழக்கமானது முற்று முழுதாகத் தீமைதான் சொல்லிவிடுகிறது என்றால் இல்லை என்று கூறலாம் . ஏனென்றால் இதன் மூலம் சில சிறுவர்களுக்கு நன்மையான விடயங்களும் ஏற்படுகின்றன.

அவர்களுக்கு இதனை தொடர்ச்சியாக பார்த்து வருவதால் புதிய மொழி பயன்பாடுகள் வார்த்தை பிரயோகங்கள் அவர்களின் மத்தியில் உருவாவதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன. குறிப்பாக ஆங்கில வார்த்தைகள் சிறு வயதிலேயே உச்சரிக்க ஒலிக்கின்ற திறமை உண்டாகிறது. மற்றும் மூளை விருத்தியை அதிகரிக்கவும் செய்கிறது. ஏனெனில் தற்கால சிறுவர்கள் தொழில்நுட்பங்களுடன் வாழ்ந்து வருவதால் அவர்களுடைய சிந்தனைகள் வித்தியாசமானதாகவும் பரந்துபட்டதாகவும் காணப்படுவது இதற்கு ஒரு காரணமாக உள்ளது. இவ்வாறு சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தி வரும் இந்தக் கார்ட்டூன் பழக்கமானது அவர்களுக்கு நன்மையாக அமைகின்ற வகையிலும் அதிகமான பிரதிகூலங்களை ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் இந்தப் பழக்கத்தில் இருந்து சிறுவர்களை விடுவித்துக் கொள்வதற்கும் அதனை ஆரம்பித்து வைத்த பெற்றோர்களே அவர்களை வெளியுலகத்துக்கு ஊடகங்களில் இருந்து வெளிக்கொண்டு வருவதற்கும் வழி கோலியாக அமைய வேண்டியது ஒரு கடமையாக உள்ளது.

இதனால் சிறுவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு எவ்வளவு இதனை குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து இயற்கையுடனும் உறவுகளுடன் இணைந்து நல்ல ஒரு புதிராக கொண்டுவர முயற்சி செய்வோம்.

# வவுனியாவில் மாபெரும் தமிழ் விழா ‘குறிஞ்சிச்சாரல்’

## பேராதனைப் பல்கலை. தமிழ்சங்கம் ஏற்பாடு

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் 98 ஆவது வருடச் செயற்குழுவினர் இம்முறை குறிஞ்சிச் சாரலை, மருத நிலமாம் வவுனியா மண்ணில் நிகழ்த்த ஏற்பாடு செய்துள்ளனர்.

நாளை(15) ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 04 மணிக்கு வவுனியா கலாச்சார மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழகத் தமிழ்சங்கத்தின் தலைவர் கஜினியின் வரவேற்புரையோடு தொடங்கவுள்ள இந்த நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவரும் தமிழ்த்துறையின் தலைவருமான பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் பெருந்தலைவர் உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. அற்புதராஜ் கலந்து கொள்வார்.

இசை, நடனம், கிராமிய நடனம், வில்லுப்பாட்டு, நாடகம், கூத்து, விவாதம் என தமிழின் பல்துறை ஆற்றல்களின் வெளிப்பாடாக கலை நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் மட்டுமன்றி பிற பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில், தன்னுடைய ஆயுள்காலத்தின் பெரும்பகுதியை தமிழுக்காக நல்கிய பெரும் ஆளுமையாம் எழுத்தாளர் அகளங்கன் ‘சங்கச் சான்றோர்’ விருது வழங்கி, தமிழ்ச் சங்கத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளார்.

“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும், கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்ற பாரதியின் முழக்கத்துக்கு ஏற்ப தமிழூறும் செய்தி தரணியெல்லாம் சேர பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் வருடா வருடம் பெருமையோடு ஏற்பாடு செய்யும் பெருநிகழ்வு “குறிஞ்சிச்சாரல்” .

இலங்கைப்பல்கலைக்கழக வரலாற்றில் மிக நீண்ட பாரம்பரியம் கொண்டது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்சங்கம். இலங்கைக்கும் தமிழ் அறிவுப் புலத்துக்கும் பெருமை சேர்த்த பேராசிரியர்களான க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், சு.வித்தியானந்தன், ஆ. சதாசிவம் முதலான ஆளுமைகளில் ஆற்றல் வெளிப்பாட்டுத் தளமாகத் திகழ்ந்த பெருமைக்கு உரியது இக் குறிஞ்சிச்சாரல் அரங்கம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஒன்பது பீடங்களிலும் உள்ள பல்வகைமை ஆற்றல்சார் தமிழ் பேசும் மாணவர்களின் கலைத்திறனை உலகறியச் செய்திடும் முகமாக வருடா வருடம் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்சங்கம் குறிஞ்சிச்சாரலை ஏற்பாடுசெய்து வருகின்றது.


அந்த வகையில், இயல், இசை, நாடகம் என முத்தமிழ் முக்கான பெரும் அங்கீகாரமாக இந்த நிகழ்வானது ஒழுங்கமைக்கப்படுகிறது.

இலங்கை முழுவதும் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என நானிலமும் தமிழ்த்தூது பரப்பும் பெருமுயற்சியாய் குறிஞ்சிச்சாரல் திகழ்கிறது. ஒரு குறிப்பிட்ட செயற்குழுவானது நடப்பாண்டில் செயற்படுகையில், ஏதேனுமொரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே குறிஞ்சிச்சாரலை நிகழ்த்துவது வழமையாகும். அதன்படி ஹட்டன், யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை, கண்டி ஆகிய நிலங்களில் களம் கண்ட குறிஞ்சிச்சாரல் நிகழ்வானது கடந்த ஆண்டு நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் புதுப் பொலிவோடு கண்டியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புதிய காற்றழுத்த தாழ்வு நாளை உருவாகின்றது

புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஒன்று நாளை உருவாகும் என்றும், அதன் காரணமாக தமிழகத்தில் பருவ மழை மேலும் தீவிரம் அடையும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று தெற்கு அந்தமான் கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகும் என்றும் அதனைத் தொடர்ந்து நாளை புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக உருவாகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகர உள்ளதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக 16 ஆம் திகதி 17 மற்றும் 18ஆம் திகதிகளில் டெல்டா, வட கடலோர மாவட்டங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். இதன்படி 16 ஆம் திகதி கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இடி மின்னலுடன் மிதமான மழையும், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்ய உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# காங்கிரஸ் முக்கியத் தலைவர் இளங்கோவன் காலமானார்

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல்நலக் குறைவால் இன் காலை காலமானார்.

உடல்நல குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இன்று காலை 10.12 அளவில் காலமானார் என தெரிவிக்கப்படுகின்றது.

மறைந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் உடல், நாளை இராமாபுரத்தில் தகனம் செய்யப்பட உள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.



அவரது மறைவை அடுத்து சத்திய மூர்த்தி பவனில் அரைக்கம்பத்தில் கட்சிக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

இதேவேளை அவரது மறைவுக்குப் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மனதில் பட்டதைப் பேசிவிடும் பண்புக்குச் சொந்தக்காரர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல், அவரது மகனையும், மருத்துவர்களையும் தொடர்புகொண்டு, அவரது உடல்நலன் குறித்த தகவல்களை அவ்வப்போது அறிந்து வந்தேன்.

இந்நிலையில், இன்று காலை அவரது உடல்நலனில் பின்னடைவு ஏற்பட்ட செய்தியும் அதனைத் தொடர்ந்து அவர் மறைவுற்றார் என்ற செய்தியும் வந்தடைந்தது. அவரது மறைவு அரசியல் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் மிகவும் வேதனையை ஏற்படுத்துகிறது." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# கைது செய்யப்பட்ட நடிகர் அல்லு அர்ஜுனுக்கு பிணை

திரையரங்கம் ஒன்றில் பெண் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்தியத் திரைப்பட நடிகரான அல்லு அர்ஜுன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் நடித்து கடந்த வாரம் வெளியான திரைப்படம் ஒன்றைப் பார்க்க சென்ற பெண் ஒருவர் ஹைதராபாத்தில் உயிரிழந்தார்.

39 வயதான குறித்த பெண் சன நெரிசலில் சிக்கி உயிரிழந்ததுடன் அவரது மகன் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் நடிகர் அல்லு அர்ஜுனும் மேற்படி திரையரங்குக்குச் சென்ற நிலையிலேயே இந்த சம்பவம் நேர்ந்துள்ளது.

இந்தநிலையில் நடிகர் அல்லு அர்ஜுன், அவரது பாதுகாப்பு குழுவினர் மற்றும் சம்பவம் இடம்பெற்ற திரையரங்கின் நிர்வாக பணியாளர்கள்



உள்ளிட்டோர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து மேற்படி தரப்பினர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் நடிகர் அல்லு அர்ஜுனை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் பின்னர் மேல் நீதிமன்றினால் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், திரையரங்குக்கு வருவது தொடர்பில் அவர், தங்களுக்கு அறிவிக்கவில்லை என திரையரங்கத்தின் நிர்வாகத்தினர் நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளனர்.

# சிரியாவில் சர்வாதிகார ஆட்சியின் முடிவை கொண்டாடும் வகையில் பாரிய பேரணிகள்



சிரியாவில் 5 தசாப்தகாலமாக நிலவிய அசாட்டின் சர்வாதிகார ஆட்சியின் முடிவைக் கொண்டாடும் வகையில் நாடளாவிய ரீதியாக பாரிய பேரணிகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை முஸ்லீம் ஆயுததாரிகள் ஆட்சியைக் கைப்பற்றியதை அடுத்து, தலைநகர் டமஸ்கஸ் மற்றும் பிற நகரங்களில் பொதுமக்கள் வீதியில் இறங்கி இந்த பேரணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயுததாரிகள் டமஸ்கசை கைப்பற்றியதை அடுத்து, முன்னாள் ஜனாதிபதி பஷிர் அல்-அசத் ரஷ்யாவிற்குத் தப்பி சென்ற நிலையில், அவருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அகமத் அல்-ஷாரா மக்களை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இது தவிர, அசாத்தின் நிர்வாக காலப்பகுதியில், சித்திரவதை கூடமாக உபயோகிக்கப்பட்ட சிறைச்சாலைகளை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் சிரியாவில் ஸ்திரத் தன்மையினை ஏற்படுத்தும் நோக்கில் இராஜதந்திர நகர்வுகள் இடம்பெறுகின்றன.

இது தவிர, அமெரிக்க இராஜாங்க செயலாளர் அண்டனி பிளிங்கன், சிரியா தொடர்பாகப் பேச்சுவார்த்தையினை மேற்கொள்ளும் நோக்கில், திட்டமிடாத விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.





# உக்ரைன் எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீது தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது ரஷ்யா

உக்ரைனின் எரிசக்தி உட்கட்டமைப்பு மீது ரஷ்யா நேற்று இரவு முழுவதும் பரவலான தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

இதன் காரணமாக நாடு அவசர கால மின்சார தடைகளை நடைமுறைபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிரி நாடு தனது பயங்கரவாதத்தைத் தொடர்கிறது. மீண்டும் ஒருமுறை, உக்ரைன் முழுவதும் எரிசக்தித் துறை பாரிய தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்று உக்ரைன் எரிசக்தி அமைச்சர் ஜெர்மன் ஹலுஸ்செங்கோ தனது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



சேதத்தின் அளவு இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ள அதே நேரத்தில் மக்களை தங்குமிடங்களில் இருந்து வெளியேற வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

பக்கங்கள் 04

கனடா முரசு

சனிக்கிழமை 14/12/2024

## றொறன்ரோவில் நீர் கட்டணம் அதிகரிக்கும் சாத்தியம்

றொறன்ரோவில் நீர் மற்றும் கழிவு சேகரிப்பிற்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு இந்த கட்டண அதிகரிப்பை

02

# கனடாவில் 36 ஆண்டுகளின் பின்னர் அடையாளம் காணப்பட்ட மண்டையோடு



கனடாவில் 36 ஆண்டுகளுக்கு முன்னதாக கொல்லப்பட்ட ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மண்டையோட்டின் மூலம் உயிரிழந்தவர் பற்றிய விபரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

பீட்டர்ப்ரோவ் பகுதியில் அமைந்துள்ள ஆறு ஒன்றில் இந்த மண்டையோடு மீட்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டில் ஆற்றில் 130 அடி ஆழத்தில் மண்டையோடு மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

02

# கப்பம் கோரல் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து பேர் கைது




கனடாவின் பீல் பிராந்தியத்தில் கப்பம் கோரல் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் ஐந்து பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரம்டன் மற்றும் மிசிசாக பகுதியில் தென் ஆசிய நாடுகளைச் சேர்ந்த நபர்களை இலக்கு வைத்து இந்த கப்பம் கோரல்கள் இடம் பெற்றுள்ளன.

02

## கப்பம் கோரல் சம்பவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த கப்பம் கோரல் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இதுவரையில் மொத்தமாக 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக 154 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கப்பம் கோரல் மற்றும் அச்சுறுத்தல் விடுத்தல் தொடர்பில் கடந்த 2023 ஆம் ஆண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

முகநூல் மற்றும் றாயவளயீ ஊடாக இந்த கப்பம் கோரல்கள் மற்றும் மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரம்டன், ஹமில்டன் மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய பகுதிகளை சேர்ந்த சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளனர்.

25 வயதான ஹார்மான்ஜிட் சிங், 44 வயதான டெஜிண்டர் டாட்லா, 21 வயதான ருக்சார் அசாகாக்ஸி, 24 வயதான தினேஷ் குமார், 27 வயதான பந்துமான் சேக்கோன் ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கப்பம் கோரல் சம்பவங்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரி விக்கப்படுகிறது.

## கனடாவில் 30 ஆண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

இந்த மண்டையோட்டை ஆய்வு கூடமொன்றுக்கு அனுப்பி வைத்து பரிசோதனை நடத்தி மூன்றாண் டுகளின் பின்னர் அது யாருடைய மண்டையோடு என்பது கண்டறியப்பட்டுள்ளது.

38 வயதான ஜெரால்ட் ட்ரோச்சர் என்ற நபரின் மண்டையோடே இதுவென்பது கண்டறியப்பட்டுள் ளது.

கடந்த 36 ஆண்டுகளாக இந்த மண்டையோடு யாருடையது என்பதை கண்டறிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது வெற்றியளிக்க வில்லை.

இந்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளார் என கண்டறியப்பட்டுள்ளது.

இந்த கொலையுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய உதவுவோருக்கு 5000 டொலர் சன் மானம் வழங்கப்படும் என பொலிஸார் அறிவித்துள் ளனர்.

## ரொறன்ரோவில் நீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக தெரி விக்கப்படுகிறது.


ரொறன்ரோ வீட்டு உரிமையாளர்கள் மீது இவ்வாறு கட் டண அதிகரிப்பு விதிக்கப்பட உள்ளது.

நீர் மற்றும் கழிவு நீர் என்பனவற்றிற்காக கட்டணங்களை 3.7 வீதத்தினால் அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இவ்வாறு கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன் மூலம் இந்த கட்டண அதிகரிப்பு மூலம் சுமார் 53 மில்லியன் டொலர்களை மேல் அதிகமாக ஈட்ட முடியும் என நகராட்சி நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.






# ஒன்றாரியோ மக்களுக்கு வீட்டை விட்டு வெளியேற வேண்டாமென அறிவுறுத்தல்

கனடாவின் – ஒன்றாரியோ மாகாண மக்களை வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



சீரற்ற காலநிலை காரணமாக இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு காரணமாக சில பாதைகள் மூடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு நிகழ்வுகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது. ஒன்றாரியோவின் பல இடங்களில் சுமார் 60 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்படக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

சில இடங்களில் இந்த நிலைமை மேலும் மோசமடையக் கூடும் எனவும், 100 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், மக்கள் வீடுகளிலேயே இருப்பது மிகவும் சிறந்தது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.










# உதவி செய்த முயற்சித்து பணத்தை இழந்த பெண்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பெண் ஒருவர், மற்றுமொரு பெண்ணுக்கு உதவ முயற்சித்து பணத்தை இழக்க நேரிட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணம் வுட்பிரிட்ஜ் பகுதியைச் சேர்ந்த மாரியா பெதக்டாக் என்ற பெண்ணே இவ்வாறு பெருந்தொகை பணத்தை இழந்துள்ளார்.

இந்த பெண் சுமார் 14,000 டொலர்களை இழந்துள்ளார். டாக்ஸி மோசடியில் இந்த பெண் சிக்கி பணத்தை இழக்க நேரிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பெண் ஒருவர் டாக்ஸி கட்டணத்தை செலுத்த முடியாது அவதியற்றபோது தாம் அவருக்கு உதவியதாக தெரிவிக்கின்றார்.

பத்து டொலர் பயண கட்டணத்தை பணமாக செலுத்த முடியாது எனவும் அட்டை மூலம் செலுத்துவதற்கு உதவுமாறும் அந்தப் பெண் கோரியுள்ளார்.

கருணை உள்ளம் கொண்ட மாரியா தனது வாங்கி அட்டையை வழங்கி கொடுப்பனவை மேற்கொண்டுள்ளார்.

அந்த நேரத்தில் மேற்படி பெண் பத்து டொலர்களை மாரியாவிற்கு வழங்கியுள்ளார்.

பின்னர் சில நாள்களில் தனது வங்கி கணக்கில் இருந்து 14000 டொலர் அறவீடு செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இவ்வாறு பாரிய அளவில் மோசடி இடம் பெற்றுள்ளதாக குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

டாக்ஸி மோசடிகள் தொடர்பில் றொறன்ரோ பொலிஸார் அடிக்கடி எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.


இதுவரையில் இந்த ஆண்டில் டாக்ஸி மோசடிகள் ஊடாக சுமார் 1.6 மில்லியன் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாள்தோறும் இவ்வாறான டாக்ஸி மோசடிகள் இடம் பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் மக்கள் போதிய அளவு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# றொறன்ரோவில் இனம் தெரியாத பாக்டீரியா தாக்கம் குறித்து எச்சரிக்கை





றொறன்ரோவில் இனம் தெரியாத பாக்டீரியா தாக்கம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

றொறன்ரோ பொதுச் சுகாதார நிறுவனம் இது தொடர்பிலான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சிகிலோ என்ற பாக்டீரியாவினால் ஏற்படக்கூடிய சிகிலோஸிஸ் என்ற நோய் தொற்று தாக்கம் பரவி வருவதாகவும், இது மருந்துகளுக்கு தாக்கு பிடிக்கக்கூடிய பாக்டீரியா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய் மனிதனின் சமிபாட்டுத் தொகுதியை தாக்கக்கூடியது எனவும் இதனால் வயிற்று வலி வாந்தி பேதி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இந்த நோய் தாக்கத்தினால் 119 பேர் பாதிக்கப்பட்டனர் எனவும் இந்த ஆண்டில் இதுவரையில் 101 பேருக்கு இந்த நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.